DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C. No.65/2023**
**P.W.5**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.அஜய் தங்கம் |
| Father's Name | : | திரு.விஜயகுமார் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 40 |

(Accused 1 to 3 are present).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of May 2026.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மதுரை சரக குற்றப்பிரிவு குற்ற புலனாய்வு துறையில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 2023ம் வருடம் லால்குடி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணியில் இருந்தேன்.

அப்போது 27.04.2023 அன்று காவல் உதவி ஆய்வாளர் திருமதி.இசைவாணி அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது திருச்சி மாவட்டம், லால்குடி தாலுகா, கோமாக்குடி, மேலத்தெருவில் வசிக்கும் வேலுச்சாமி மகள் திவ்யா என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த புகாரினைப் பெற்று இலால்குடி அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.11/2023, பிரிவுகள் 294(b), 417, 420, 376 IPC, r/w.3(1)(w)(i)(ii) SC/ST(POA) Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த புகார் மனு **அ.த.சா.ஆ.2** ஆகும். முதல் தகவல் அறிக்கை

**அ.த.சா.ஆ.3** ஆகும். பின்பு முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

இவ்வழக்கு பட்டியல் வகுப்பினர் மீதான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான வழக்கு என்பதால் புலன்விசாரணை அதிகாரியை நியமிக்கவேண்டி திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு முதல் தகவல் அறிக்கையின் நகலுடன் வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளார்.

மேற்படி வழக்கை திருச்சிராப்பள்ளி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண் C.No.17/SJ&HR/PROCEEDINGS/TRI/2023, நாள் 27.04.2023ன் படி நான் எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அந்த செயல்முறை ஆணை **அ.த.சா.ஆ.4** ஆகும்.

நான் இந்த வழக்கை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 27.04.2023 அன்று 16.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சீலன் மற்றும் இளங்கோவன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு சம்பவ இடத்தைக் குறிக்கக்கூடிய பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.5** ஆகும். மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.6** ஆகும்.

பின்பு நிகழ்நிலை புகார்தாரர் திவ்யா மற்றும் சாட்சிகள் வேலுசாமி, பிரபாவதி, நந்தகோபால், பாக்கியராஜ் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் சீலன் மற்றும் இளங்கோவன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

நிகழ்நிலை புகார்தாரர் திவ்யாவை விசாரித்தபோது எதிரி சாருகானும், புகார்தாரரும் நெருக்கமாக இருந்த புகைப்படங்கள் ஐந்தை என்னிடம்

ஒப்படைத்ததை பெற்று படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த புகைப்படங்கள் **அ.த.சா.ஆ.7 வரிசை** ஆகும். படிவம் 91 **அ.த.சா.ஆ.8** ஆகும்.

சாட்சிகளின் விசாரணையின் அடிப்படையில் சம்பவம் உண்மை என தெரிந்து இவ்வழக்கின் 1வது எதிரி சாருகானை தேடியபோது கடந்த 27.04.2023 அன்று 19.00 மணிக்கு கோமாக்குடி பஸ் ஸ்டாப் அருகே நின்று கொண்டிருந்த எதிரி சாருகானை காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து சாட்சிகள் குமார் மற்றும் தினேஷ் ஆகியோர் முன்னிலையில் விசாரித்தபோது எதிரி சாருகான் எவ்வித தூண்டுதலோ, அச்சுறுத்தலோ, ஆசைவார்த்தைகளோ இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன்.

பின்பு எதிரி சாருகானை திரேக பரிசோதனை முடித்து தக்க வழிகாவல் மூலம் நீதிமன்றத்திற்கு காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

பின்பு சாட்சிகள் செந்தில், நம்பிராஜ், ஜோதிவேல், தங்கராஜ் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் எதிரிகளுக்கு சாதிச் சான்று மெய்த் தன்மை சான்று கேட்டு இலால்குடி வட்டாட்சியரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். இலால்குடி வட்டாட்சியர் திரு.விக்னேஷ் அவர்கள் வருவாய் ஆய்வாளரின் விசாரணை மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் நிகழ்நிலை புகார்தாரர் திவ்யா இந்து அருந்ததியர் எனப்படும் பட்டியல் வகுப்பைச் சேர்ந்தவர் என்றும், எதிரிகள் சாருக்கான், ஷீலா, நட்சத்திரம் ஆகியோர்கள் கிறிஸ்துவ பள்ளன் எனப்படும் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர்கள் என்றும் சாதிச் சான்று மெய்தன்மைச் சான்று வழங்கினார். அந்த சாதிச் சான்று மெய்தன்மைச்

சான்று **அ.த.சா.ஆ.9** ஆகும். பின்பு சாதிச் சான்று மெய் தன்மைச் சான்று வழங்கிய இலால்குடி வட்டாட்சியர் திரு.விக்னேஷ் அவர்கள் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்பு இவ்வழக்கின் 1வது எதிரி சாருகானின் ஆண்மை தன்மை குறித்து மருத்துவ பரிசோதனை செய்ய முதல் நிலை காவலர் குணபாண்டியன் மற்றும் காவலர் ராஜேஷ் ஆகியோர்கள் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து எதிரியை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். 1வது எதிரி சாருகானை மருத்துவ பரிசோதனை செய்த கி.ஆ.பெ.விஸ்வநாதம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் திரு.தமிழ்செல்வன் அவர்களை விசாரித்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். மருத்துவர் 1வது எதிரி சாருகானுக்கு வழங்கிய மருத்துவ பரிசோதனை சான்று **அ.த.சா.ஆ.10** ஆகும்.

பின்னர் முதல் நிலை காவலர் குணபாண்டியன் மற்றும் காவலர் ராஜேஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நிகழ்நிலை புகார்தாரர் திவ்யாவை மருத்துவ பரிசோதனை செய்ய தலைமை காவலர் எண்.567 கலைசெல்வி என்பவர் மூலமாக இலால்குடி அரசு மருத்துவமனைக்கு மருத்துவ நமூனா மூலம் அனுப்பி வைத்தேன். நிகழ்நிலை புகார்தாரர் திவ்யாவிற்கு விபத்து பதிவேடு பதிவு செய்து மருத்துவ பரிசோதனை செய்த இலால்குடி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.வேங்கட சுப்பு அவர்களை விசாரித்து அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். மருத்துவர் புகார்தாரர் திவ்யாவிற்கு வழங்கிய விபத்து பதிவேடுடன் கூடிய மருத்துவ பரிசோதனை அறிக்கை **அ.த.சா.ஆ.11** ஆகும்.

பின்னர் இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நிகழ்நிலை புகார்தாரர் திவ்யாவிடம் இருந்து சேகரிக்கப்பட்ட 1)Veginal Swab and Item, 2)Veginal Smears ஆகியவற்றை இரசாயன பகுப்பாய்வு செய்ய தலைமை காவலர் எண்.567 கலைசெல்வி என்பவர் மூலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்கண்டவற்றை TRI/BIOL/184/2023ன் படி பெற்று இரசாயன பகுப்பாய்வு செய்து அறிக்கை வழங்கிய வட்டார தடய அறிவியல் ஆய்வக துணை இயக்குநர் திருமதி.ஜெயா அவர்களை விசாரித்து அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். திருமதி.ஜெயா அவர்கள் 1)Did not detect semen on the swabs in item 1, 2)Did not detect spermatozoa in the smears in item 2 என்று வழங்கிய பகுப்பாய்வு அறிக்கை **அ.த.சா.ஆ.12** ஆகும்.

பின்னர் இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நிகழ்நிலை புகார்தாரர் திவ்யாவிற்கு OG OPINION பெறுவதற்காக மருத்துவ பரிசோதனை செய்ய தலைமை காவலர் எண்.567 கலைசெல்வி என்பவர் மூலமாக இலால்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். நிகழ்நிலை புகார்தாரர் திவ்யாவை மருத்துவ பரிசோதனை செய்த இலால்குடி அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி.ஆனந்தி அவர்களை விசாரித்து அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். மருத்துவர் திருமதி.ஆனந்தி அவர்கள் வழங்கிய மருத்துவ பரிசோதனை அறிக்கை **அ.த.சா.ஆ.13** ஆகும்.

பின்பு வழக்கின் புலன்விசாரணையை முடித்து குற்ற இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். என்னுடைய புலன்விசாரணையின்போது சாட்சிகள் திவ்யா, வேலுசாமி, பிரபாவதி, நந்தகோபால் ஆகியோர் சம்பவம் குறித்து சொன்னார்கள்.

**<u>குறுக்கு விசாரணை(எதிரிகள் தரப்பில்)</u>**

அ.சா.1 திவ்யாவிடம் கையொப்பம் மட்டும் பெற்றுக் கொண்டு விட்டு இந்த வழக்கிற்கு ஏற்றவாறு புகார் மனு தயாரித்தோம் என்றும், அதனை அடிப்படையாகக் கொண்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றும், வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு ஏற்றவாறு பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சாட்சிகள் யாரையும் விசாரிக்காமல் ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு ஏற்ப தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. முதல் எதிரியை சொன்ன நாளில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றும் அப்போது அவர் தானாக முன்வந்து எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. முதல் எதிரிக்கும் அ.சா.1 திவ்யாவிற்கும் உடல் ரீதியாக எவ்வித தொடர்பும் கிடையாது என்றும் நான் சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை–இல்லை.</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.